# இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் நம்பிக்கை மற்றும் ஐக்கியத்தினை கட்டியெழுப்புவதற்கான இளைஞர் முன்மொழிவுகள்



“உண்மையை கண்டறிந்து நீதி மற்றும் நியாயத்துவத்தினை வெற்றிகொண்ட நாட்டுக்கான சகோதரத்துவத்துடனான வழிமுறை”

# 2023 டிசம்பர் 04 உண்மை மற்றும் நீதியை கண்டறியும் நோக்கிலான பயணம்

இலங்கையில் ஆயுத முரண்பாடு முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலம் கடந்தும் இன்னும் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கான பின்னணி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக காண முடியவில்லை. இளைஞர் அமைப்புக்களாகிய நாமும் கடந்த தசாப்த காலமாக எமது சகோதர மக்களின் துன்ப துயரங்களை புரிந்து கொள்ள முயற்சிகளினை மேற்கொண்டோம்.

தம் நெருங்கிய உறவுகளினை தேடும் பாதைகளுக்கான வழிகளில் இடை நடுவில் கைவிடப்பட்டு கதறும் தாய்மார்களினையும் துன்புறுத்தல் மற்றும் வேற்றுப்பிரிப்புடன் பார்த்தல் ஊடாக பல பாதிப்புக்களை அனுபவித்து பல எதிர்பார்ப்புக்களுடன் தமது எதிர்பார்ப்புக்களை கட்டியெழுப்ப மேற்கொள்ளும் முயற்சிக்கும் எமது சகோதர சகோதரிகளினையும் கண்டு கண்டோம். நெருங்கிய உறவுகளினை தேடும் பயணத்தில் இணைந்து கொண்டுள்ள தாய்மார்களும் எமது சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பல அநீதியான மற்றும் மனிதாபினம் அற்ற அடிப்படையில் வேற்று பிரிப்புடன் பார்த்தல் செயற்பாடு கடந்த தசாப்தம் முழுவதும் இருந்தமையால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியானதுடன் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் மிகவும் பாதுகாப்பற்ற நிலைகளுக்கு முகங்கொடுத்ததனை நாம் அனைவரும் அவதானிக்க கூடியதாக அமைந்திருந்தது.

இந்த குரோதங்கள் மற்றும் நம்பிக்கையற்ற தன்மைகள் நிறைவுக்கு வந்து ஐக்கியமான நாட்டை இன்று, அல்லது நாளை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இருப்பினும் எங்களுக்கு அதனை ஏற்படுத்துவதனை பார்க்கையில் தமது அதிகாரம் மற்றும் தம் சார்ந்த செயற்பாடுகளுக்கு மாத்திரம் அவதானத்தை எமது தலைவர்கள் செலுத்தியமையால் அவர்களது அதிகாரம் மேலும்

வலுப்பெற்றதுடன் அதற்காக இனவாதம் மற்றும் மத வாதத்தை மிக மோசமான முறையில் பயன்படுத்தியதனை நோக்க முடிந்தது.

அதிகாரத்தை தக்க வைக்க முனையும் கசப்பான அரசியல் செயற்பாடுகளுக்கு இடம் வழங்காது இன, மத வேறுபாடுகளின்றி ஒன்றாக இணைய இளைஞர் அமைப்புக்களாகிய நாம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

எமது பயணத்தில் மிக எளிமையான தலைவர்களை கேட்பதற்கு விருப்பமில்லாத உண்மைக்கு நாம் விருப்பத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வோம், ஒவ்வொருவருடைய துன்பங்களையும் நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ள தீர்மானம் எடுப்போம், எமது சகோதர மக்களின் பறிக்கப்பட்ட நீதி மற்றும் நியாயத்திற்காக ஒன்றாக குரல் கொடுக்கும் சகோதர பிணைப்பு மூலமாக உண்மை மற்றும் நீதியை கண்டறியும் பயணத்தின் முதல் படியாக கீழே உள்ள முன்மொழிவுகளினை உங்கள் மத்தியில் இவ்வாறு முன்வைக்கின்றோம்.

# 1. நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான பொறிமுறைகள்

யுத்தம் நிறைவு பெற்றதும் ஆணைக்குழுக்கள் மற்றும் அரச பொறிமுறை பல ஏற்படுத்தப்பட்டதுடன் அதற்காக பாரியளவான அரச நிதி இவற்றின் செயற்பாடுகளினை முன்னெடுக்க செலவிடப்பட்டது. அவ்வாறான பின்னணியில் மீண்டும் இவ்வாறான பொறிமுறைகளை தொடராக மேற்கொள்வதற்கான அரசியல் தள கலந்துரையாடல் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க தோன்றுகின்றது. இந்த பொறிமுறைகளுள் பல தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மிக நம்பிக்கையுடன் இருந்த போதிலும்கூட அரசியல் உறுதிப்பாடற்ற நிலைகள் மற்றும் குறித்த பொறிமுறைகள் அரசியல் கட்சி சார்பு கொண்ட போக்கினால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற தவறியமையால் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கொண்ட பொறிமுறைகளாக அவை அமையப்பெறவில்லை. மேலும் ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் பங்குபற்றலை ஏற்படுத்தல் போன்ற துறைகளின் பலவீனம் காரணமாக சமூகத்தில் இந் நிறுவனங்கள் தொடர்பில் பயத்தை மக்கள் மத்தியில் பரப்ப அரசியல்வாதிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் வலுவான நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான பொறிமுறைகளுக்காக இளைஞர் அமைப்புக்களாகிய நாம் பின்வரும் முன்மொழிவுகளினை முன்வைக்கின்றோம்.

- காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் குறித்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான பின்னூட்டிகளினை ஆராய சிவில் சமூகத்தின் சார்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் உள்ளிட்ட பங்குதாரர்களுடன் மேற்கொள்ளல்.
- காணமால் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் அதன் செயற்பாடுகளினை மீள் அமைப்பதற்காகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எதிர்பார்ப்புக்களை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்றல்.

- உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவின் கடமை பொறுப்புக்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் பரந்த மக்கள் கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், மேலும் நவீன தொழிநுட்பம் ஊடாக நிகழ்நிலை மூலம் சம்பிரதாய ஊடகங்களினை பயன்படுத்தி ஓட்டுமொத்த ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் மக்கள் நெருங்கி உண்மை வெளிப்படுத்தும் செயன்முறைகளை ஏற்படுத்தல்.
- இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்திற்கு அனைத்து இன மக்களின் மக்கள் பங்குபற்றலை ஏற்படுத்தி அதன் ஊடாக இழப்பீடுகளுக்கான தேசிய செயற்பாட்டு திட்டமிடலொன்றினை தயாரித்தலும் எதிர்வரும் மூன்று வருடங்களுள் குறித்த திட்டமிடலை செயற்படுத்தி நிறைவுக்கு கொண்டு வரல்.
- தேசிய ஒற்றுமை மற்றும் அரசியல் தீர்வுகளுக்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன் நிலையான தீர்வுகளினை தேடலுக்காக விசேட பாராளுமன்ற குழுவொன்றினை நியமித்தலும் நிலையான தீர்வுகளுக்கான தேசிய வேலைத்திட்டமொன்றினை நான்கு வருடங்களுக்குள் செயற்படுத்தலும்.
- பாரிய மனித உரிமை மீறலின்போது பாதுகாப்பு துறை, பொலிஸ் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் நடுநிலை தொடர்பில் ஆராய ஆணைக்குழுவொன்றினை நியமித்தல். குறித்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை 03 வருட காலத்தினுள் குறித்த நிறுவனங்களின் நியாயமான மாற்றங்களுக்காக ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளல்.
- மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து பொறிமுறைகள் மற்றும் தற்போது உள்ள தேசிய ஒற்றுமைக்கான முக்கியமான அரச நிறுவனங்களின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக சர்வதேச மற்றும் தேசிய சட்டத்துறை சார் தேர்ச்சி பெற்றவர்கள் அடங்கிய மேற்பார்வை குழுவொன்றை ஏற்படுத்தல்.

# 2. அரசியல் கலாச்சாரம் மற்றும் தேர்தல்

இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் தம் நிலைப்பாடுகளினை விருத்தி செய்ய மக்களை தம் பக்கம் கவரும் செயற்பாடுகளினை மேற்கொள்ள இனவாதத்தை முன்னிலைப்படுத்தி மேற்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.

பல தசாப்த காலங்களாக அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள இனவாதத்தினை கையாண்டமையால் தேசிய ஒற்றுமை மாத்திரமல்ல ஒட்டு மொத்த அரச நிருவாகம் மற்றும் மக்களது வாழ்க்கைத்தரமும் கீழ் நிலைக்கு சென்றது. அண்மிய ஈஸ்ட்டர் தாக்குதல் காரணமாகவும் அதற்கு முன்னர் யுத்தத்தை பயன்படுத்தியும் இன மற்றும் மதங்களுக்கிடையில் ஏற்படுத்திய செயற்பாடுகள் காரணமாக அவர்கள் தங்களது அபிலாசைகளை பெற்றுக்கொண்டபோதும் நீண்டகாலமாக எமது சமூகத்திற்கு ஏற்படுத்திய பாதிப்புக்கள் தொடர்பில் எமது தலைவர்கள் அதிலிருந்து பின்னோக்கி செல்லவோ, இனவாத அரசியல் செயற்பாடுகளில் இருந்து விடுபடும் நிலைகளை காண முடியாததாகவே உள்ளது. ஒவ்வொரு இனங்களையும் கீழ்நிலைப்படுத்தலோ அல்லது சந்தோசப்படுத்தல் என்ற நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு கொள்கை ரீதியான அரசியல் தன்மைகள் நோக்கிய அவதானத்தை செலுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

- அரசியல் கட்சிகள் தம் கட்சிகளுள்ளே இனவாத அல்லது மதவாத தன்மைகளின்றி அரசியல் செயற்பாடுகளினை மேற்கொள்ள ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஐக்கியத்துவத்தினை மதிக்கும் வகையில் கொள்கை ரீதியிலான அரசியலுக்காக தம் செயற்பாட்டாளர்களை பயிற்றுவித்தல்.

- மதஸ்தளங்கள் மற்றும் பொது இடங்களில் அரசியல் செயற்பாடுகளினை மேற்கொள்ளும் செயற்பாட்டினை தடுக்க தேவையான வலுவான சட்டங்களை ஏற்படுத்தல்.
- அரசியல் செயற்பாடுகளுக்காக மத தலைவர்கள் அல்லது மத பெறுமானங்களை பயன்படுத்துவதனை தடுக்க தேவையான சட்டங்களை ஏற்படுத்தல்.
- தேர்தல் காலங்களில் சர்வமத தலைவர்கள் குழு ஊடாக மத தலைவர்களின் வகிபாகத்தினை மேற்பார்வை செய்தல்.

# 3. காணாமல் போனோர்

பல தசாப்தங்களுக்கு முன்னர் நடைபெற்ற சிவில் போராட்டங்களின்போதும் நீண்டகால சிவில் யுத்த நிலையின் போதும் வயது வந்தவர்கள் மற்றும் இளைஞர் பல ஆயிரம் பேர்கள் காணாமல் போனமை தொடர்பில் அரசாங்கத்திற்கும் போராட்ட குழுக்களுக்கும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் காணாமல் போனவர்களின் நெருங்கியவர்கள் குறித்த நபர்களினை தேடுவதற்காக பல தசாப்தங்களாக பல நிறுவனங்களூடாக, பல நபர்களூடாக மற்றும் பல அரசியல்வாதிகளூடாகவும் முயற்சிகளினை மேற்கொண்டுள்ளார்கள். குறித்த காணாமல் போனவர்கள் தொடர்பில் சரியான தகவல்களை கண்டறிய இன்னும் அவர்களது நெருங்கிய உறவுகள் முயற்சித்து வருகின்றனர். குறித்த பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நம்பிக்கையான தகவல்களை வழங்கவும் மீள இவ்வாறான சம்பவங்கள் நடைபெறா வண்ணம் ஏற்படமாட்டாது என்ற நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளினை முன்னெடுக்க கடந்த அரசாங்கங்கள் மற்றும் தற்போதைய அரசாங்கமும் தவறியுள்ளன.

- எவரேனும் ஒரு நபர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாடு மற்றும் விசாரணை அறிக்கை மனித உரிமை ஆணைக்குழு , இலங்கை பொலிஸ் உள்ளிட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பகிரங்கப்படுத்த செயற்படல் அல்லது உரிய குடும்பங்களுக்கு வழங்கல்.
- காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை குழுவொன்றை ஏற்படுத்தலும் குறித்த குழுவில் பங்கேற்க சர்வதேச மற்றும் தேசிய விசாரணையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கலும்.
- காணாமல் போனவர்களின் வழக்குகளிற்காக மாத்திரம் விசேட நீதிமன்றத்தினை ஏற்படுத்தல்.
- அரச நிதி ஒத்துழைப்புடன் சட்ட செயற்பாடுகளினை முன்னெடுக்க சட்டத்தரணிகளை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தினை குறித்த குடும்ப அங்கத்தவர்களுக்கு வாய்ப்பளித்தல்.

# 4. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள்

யுத்த காலத்தின்போது விசேடமாக யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்த கால வேளையில் நடைபெற்ற மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் காரணமாக இலங்கையின் சிறுபான்மை சமூகம் மனிதாபிமானமற்ற அடிப்படையில் பார்க்கப்பட்டதுடன் அதிகளவான மக்கள் கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள். மேலும் பயங்கரவாத குழுக்கள் மூலமாக துன்புறுத்தல்களுக்கு நாட்டின் அனைத்து மக்களும் முகங்கொடுக்க வேண்டியும் ஏற்பட்டது. பெண்கள் துஸ்பிரயோகம் மற்றும் சிறுவர்கள் துன்புறுத்தப்படல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் , மனிதாபிமானமற்ற முறையில் கொடூர கொலைகள், கூட்டு கொலைகள் உள்ளிட்ட குற்றங்கள் நடைபெற்றதனை அனைத்து தரப்பினர்களும் ஏற்றுக்கொண்டபோதும் அனேக நிலைகளில் இளைஞர்களாகிய எமக்கு கேட்க முடியுமானதாக அமைவது யுத்த நிலவரங்களின்போது அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதால் அதனை மறந்துவிட வேண்டும் என்பதனையே ஆகும். அதன் யதார்த்தத்தை கவனத்திற்கொள்ளும் போது பல ஆயிரக்கணக்கான குற்றவாளிகளை குறைந்த பட்சம் புனருத்தாபன செயற்பாடுகளுள் சமூகமயப்படுத்தாது நேரடியாக சமூகமயப்படுத்தியதனால் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் வட கிழக்கு மாத்திரமல்ல நாடு முழுவதும் வியாபித்துள்ளதனை நோக்க முடிகின்றது. எனவே அதிலிருந்து விடுபட்டு எதிர்கால பரம்பரைக்காக சமாதானமான சமூமொன்றை ஏற்படுத்த வேண்டுமாயின்

- மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணையை முன்னெடுக்க இதுவரை சிறப்பான செயற்பாடு ஆரம்பிக்கப்படாமையால் வெளிநாட்டு விசாரணை குழுக்களின் ஒத்துழைப்பினை பெற்று குறித்த விசாரணைகளை ஆரம்பிப்பதுடன் மக்களுக்கு அதன் முன்னேற்றத்தை அவ்வப்போது பெற்றுக்கொள்ள பரந்த ஊடக வலையமைப்பினை ஏற்படுத்திக்கொடுத்தல்.

- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்டுத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசேட விசாரணை குழுவொன்றினை நியமித்தல்.
- யுத்ததின்போது அனைத்து தரப்பினரக்கும் ஏற்பட்ட மனிதாபிமானமற்ற குற்றங்கள் தொடர்பிலான அறிக்கையொன்றினை மும் மொழிகளில் பகிரங்கப்படுத்தல்.
- குறித்த குற்றங்கள் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிமன்ற கட்டமைப்பின் ஊடாக சட்டத்தை நிலைநாட்டுவதற்கான பொறிமுறை ஒன்றினை தயாரித்தல்.

# 5. இலங்கையில் வர்த்தகம் மற்றும் நல்லிணக்கம்

இலங்கை மக்கள் இடையிடையே வர்த்தக நோக்கங்களை அடிப்படையாக கொண்ட வர்த்தக சமூகத்தினரிற்கு நெருங்கிய மத மற்றும் அரசியல் தலைவர்களின் நடுநிலை ஏற்படுத்தப்பட்டமையால் மத மற்றும் இன முரண்பாடுகளின் குற்றவாளிகளாக மாற்றப்பட்டள்ளனர். வர்த்தக ஊக்குவிப்பு செயற்பாடுகளுக்காக ஒரு இனத்தை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் அல்லது போலி பிரசார செயற்பாடு காரணமாக பரந்த வர்த்தக வலைப்பின்னலும் பாதிக்கப்பட்டதுடன் இன்னொரு இன வர்த்தக வலைப்பின்னல் கட்டமைப்பு ஊக்குவிக்கப்படுகின்ற செயற்பாட்டை நாம் காண முடிந்தது. மேலும் சில வர்த்தக சமூகம் பெரும்பான்மை பாவனையாளர்கள் மத்தியில் கருத்துக்களை முன்வைக்கையில் சிறுபான்மை மக்கள் சமூகத்தினர் குழுக்களுக்கு பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தினை விடாத பல சம்பவங்களினை நாம் அறிந்து கொண்டோம். குறித்த துன்பியல் மற்றும் தடைகள் இறுதியில் மிக கடுமையான முறையில் முரண்பாடாக மாறி வர்த்தக அபிலாசைகளுக்கு அப்பால் சென்று அரசியல் அதிகார பரிமாறல்களுக்கும் அவகாசத்தை ஏற்பத்தி கொடுத்தது.

இந்த அதிகார முறைமை வர்த்தக, மத மற்றும் அரசியல் போன்ற பலமான மூன்று துறைகளால் ஏற்படுத்தப்பட்டமையால் அதன் மூலம் உருவான அழுத்தம் கொண்ட நிலை காரணமாக நல்லிணக்கம் மாத்திரமன்று ஒட்டு மொத்த சமூக பெறுமானங்களும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால்

- இன மற்றும் மதத்தை அடிப்படையாக கொண்ட பெயர்களினை வர்த்தக நிலையங்களுக்கு பயன்படுத்துவதனை தடுப்பதும் இன அல்லது மதத்தை அடிப்படையாக கொண்ட வர்த்தக ஊக்குவிப்பு செயற்பாடுகளுக்காக புதிய ஒழுங்குகள் மற்றும் சட்டங்களை ஏற்படுத்தல்.
- வர்த்தக சமூகத்தினரின் வருடாந்த மாநாட்டின் ஊடாக தேசிய நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டல் மற்றும் மத அல்லது இனவாத குரோதத்துடன் அற்ற வர்த்தக

துறைகளை புதிய அறிவு மற்றும் பெறுமானங்கள் ஊடாக விருத்தி செய்தல்.

- வர்த்தக ஊக்குவிப்புக்காக மத தலைவர்கள் அல்லது மத எண்ணக்கருக்களை பயன்படுத்துவதற்கான மட்டுப்பாடுகளினை விதித்தல்.
- சர்வமத தலைவர்களின் தலைமையில் சமூக பெறுமானங்களை அடிப்படையாக கொண்ட தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டமொன்றினை தயாரித்தல்.

# 6. காணி சொத்து பாதிப்புக்கள் மற்றும் பலவந்தமாக வெளியேற்றல்

யுத்த கால வேளை மற்றும் அதற்கு மன்னர் நிலவிய இன முரண்பாட்டு கால வேளையில் பல இனங்கள் உரிய மாகாணங்களில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் உட்பட வன்முறை காரணமாக தாம் வாழ்ந்த காணி மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை கைவிட்டு செல்ல வேண்டியேற்பட்டது. யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதும் பாதுகாப்பு படைகள் தங்கியிருக்கும் காணிகள் காணி உரிமையாளர்களுக்கு மீள வழங்க இன்னும் முடியாமல் இருப்பதுடன் வட கிழக்கு பிரஜைகளின் சம்பிரதாய காணிகள் மற்றும் மத தளங்களுக்குறிய காணிகளிடையே முரண்பாடு கொண்ட நிலவரங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றன. மேலும் காணி உரிமம் இல்லாமல் போதல் அல்லது காணிக்கான சட்டரீதியான ஆவணமின்மை காரணமாக உள்ளவர்கள் அதிகமாக உள்ளனர்.

- பாதுகாப்பு படைகளால் கையகப்படுத்தப்பட்ட விடுவிக்கப்படாத காணிகள் அதன் உண்மை உரித்தாளர்களுக்கு வழங்குதல்
- யுத்த காலத்தில் அரசிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட மக்களின் சம்பிரதாய காணிகளினை ஏதாவது அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுமாயின் குறித்த அபிவிருத்தி செயற்பாடுகளின் உரித்தின் பகுதியை உரிய உரிமையாளர்களுக்கு வழங்கல் அல்லது மாற்று காணிகளினை வழங்கல்.
- தொல்பொருள் பிரதேசம் என குறிப்பிட்டு கையகப்படுத்தப்பட்ட மக்களது காணிகளினை விரைவாக விசாரணைகளை மேற்கொண்டு மக்களுக்கு வழங்கல் மற்றும் தொல்லியல் காணிகளினை பாதுகாக்க அனைத்து மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் வழிமுறையை ஏற்படுத்தல்.

# 7.
# சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு

வட கிழக்கு மாகணங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள தடையாக அமையும் செயற்பாடுகளின் அழுத்தம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியற்ற அடிப்படையில் கேள்விக்குட்படுத்தல், கப்பம் கோரல், வர்த்தக சமூகத்தினருக்கு விடுக்கும் அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக யுத்தத்தினால் பாதிக்ககப்பட்ட மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை அனுபவிக்க முடியாத நிலை உள்ளது.

- இலங்கையின் பாதுகாப்பு துறைகள் மற்றும் புலனாய்வு துறைகள் மூலம் சிவில் பிரஜைகளுக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களை ஆராய்வதற்கான பாராளுமன்ற குழுநிலை ஒன்றை நியமித்தல் வேண்டும்.

# 8. மொழி

இலங்கையின் மொழி பயன்பாடு காரணமாக பிரஜைகள் முகங்கொடுக்கின்ற பிரச்சினை நோக்கும்போது தமிழ் மொழி பயன்பாடு காரணமாக வேற்று பிரிப்புடன் கவனித்தல் போன்ற சந்தர்ப்பங்கள் பல காணப்படுகின்றன. நிருவாக செயற்பாடுகளின் போது பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடு காரணமாக வட கிழக்கு பிரஜைகளுக்கு தம் சேவைகளை பெற்றுக்கொள்ள நீதியை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வட கிழக்கு பிரதேசங்களில் சிங்கள மொழியை பயன்படுத்தும் மக்கள் மய நிருவாக மற்றும் சட்டத்தை பெற்றுக்கொள்ளும் பொறிமுறையில் தமிழ் மக்கள் பிரச்சினைகளை முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

- அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் மொழி பெயர்ப்பு சேவை பெற்றுக்கொள்ளும் இயலுமை பிரஜைகளுக்கு இருத்தல் வேண்டும்.
- பொலிஸ் சேவையின் உயர் பதவிகளுக்கு பொருத்தமான தமிழ் உத்தியோகத்தர்களை இணைப்புச்செய்தலும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு விசாரணை செயற்பாடுகளை முன்னெடுக்க கூடிய வாய்ப்பை வழங்கலும்.
- ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் மொழி பெயர்ப்பு அலகொன்றினை அறிமுகப்படுத்தல்.